# அமெரிக்கன் போட் சங்கத்தின்

# மகோற்சவ ஆண்டு.

## ௲௮௱௬௰ ௵.

செல்லாநின்ற இவ்வாண்டு பிரதேசங்களுக்குக் குருமாரை அனுப்பும் அமெரிக்கன்போட்சங்கத்தின் மகோற்சவ வருஷம். இச்சங்கம் இற்றைக்கு ஐம்பது வருஷங்களுக்கு முன் ஸ்தாபிக்கப்பட்டது. யேசுக்கிறிஸ்துநாதர் உலக இரட்சகரென்று அஞ்ஞான மதஸ்தருக்குக் கூறுவதே அதின் நோக்கம். சிறு கடுகளவு விதை உன்னத ஆலவிருட்சமாவதெப்படியோ, அப்படி இச்சங்கமும் ஆரம்பத்தில் சிறிதாயினும் இப்பொழுதோ பெரிய சங்கமாய் வளர்ந்திருக்கின்றது. இச்சங்கமாகிய ஆற்றின் வழியாய்ச் சுவிசேஷ ஆசீர்வாதங்கள் பற்பல தேசங்களுக்கும் பற்பல வருணத்தவர்களுக்கும் வெள்ளப்பெருக்கெடுத்துப் பாய்கின்றன. இச்சங்கத்தினால் முதன்முதல் ஸ்தாபிக்கப்பட்ட இடங்களில் யாழ்ப்பாணமும் ஒன்று. யாழ்ப்பாணத்தில் நிலைபெற்றிருக்கின்ற அமெரிக்கன் மிசியோனால் ஸ்தாபிக்கப்பட்டபாடசாலைகளிலும், வித்தியாசாலைகளிலுங் கல்விபயின்று எண்ணிறந்த சலாக்கியங்களை அனுபவித்தவர்களில் அநேகர் இலங்கைத்தீவிலும் வடதேசத்திலுஞ் சிதறுண்டிருக்கிறார்கள். சிலர் உயர்ந்த இராச உத்தியோகங்களிலிருக்கிறார்கள். அநேகர் இவ்வுலக காரியங்களில் அதிவிருத்தி அடைந்திருக்கிறார்கள். சிலர் விலைமதித்தற்கரிய முத்தைக் கண்டுபிடித்தார்களென்

றும், அவர்கள் யேசுநாதருடைய தாசர்களாய், அழியாத
தும், மாசற்றதும், வாடாததுமாகிய ஒரு சுதந்திரத்தைப்
பெற்றுக்கொள்ளும்படி அவர் மூலமாய் முத்திரையைத்த
ரித்திருக்கிறார்களென்றும் நம்புகிறோம்.

அவர்களில் அநேகர் தாங்கள் அனுபவித்த ஏராளமான
சலாக்கியங்களுக்கு நன்றியறிதலாகவும், இச்சங்கத்தின்
திவ்விய நோக்கங்களில் விருப்புள்ளவர்களாய்ச் சுவிசே
ஷம் பிரசங்கிக்கப்படாத தேசங்களுக்குச் சுவிசேஷ ச
லாக்கியங்கள் பெருகும்படி உதவிசெய்யும் மனோவாஞ்
சைக்கு அடையாளமாகவும், தங்களுடைய திரவிய சாலை
களின் கதவைத் திறந்து இச்சங்கத்திற்கு மகோற்சவகா
ணிக்கை கொடுப்பார்களென்று முழுநம்பிக்கையுள்ளவர்
களாயிருக்கிறோம்.

இச்சங்கத்தின் ஆரம்பம், வளர்ச்சி, தற்கால நிலைமை,
முதலான வரலாறுகளை இவ்விடம் எடுத்து உரைக்கக் கரு
துகிறோம். இப்படி எழுதுவதினால், நீங்கள் இக்காரியங்
களை அறிந்துகொண்டால் மாத்திரம் போதுமென்பது எ
ங்கள் கருத்தல்ல, ஆனால் "நீங்கள் உலகத்தில் எங்கும்
போய்ச்சிருட்டியாண யாவருக்குஞ் சுவிசேஷத்தைப் பிர
சங்கம் பண்ணுங்கள்" என்று எங்கள் கர்த்தராகிய யேசு
க்கிறிஸ்துநாதர் திருவாய்மலர்ந்தருளிய கடைசியான கட்
டளையை நிறைவேற்றும்படி இச்சங்கம் முயன்றிருக்கு
ம் பெரிய கருமத்தில் அதிவிருப்பத்தை உங்களுடைய இ
ருதயங்களில் எழுப்பிவிடுவதே எங்கள் பேராசை.

பெரும்பெயர் படைத்த சாமுவேல் மில்ஸ் (Samuel
J. Mills) என்ற பரோபகாரியின் நாமம் இச்சங்கத்தின்
வரலாறுகளை அறிந்த ஒவ்வொருவருடைய இருதயபீடங்
களிலுந் தீட்டப்பட்டிருக்குமென்று நம்புகிறோம். அவர்
௧௲௭௱௮௰௩ம். ஆண்டு நாட்டுப்பகுதியைச் சார்ந்த ஒரு குறி
ச்சியிற் பிறந்தார். அவர் தம்முடைய பிள்ளைப்பிராயந்
தொடங்கி அஞ்ஞான மதஸ்தருக்குக் குருமாரை அனுப்பு
ம் விஷயத்தைப் பற்றிப் பலருஞ் சம்பாஷிக்கக் கேள்விப்
பட்டார். தெய்வபத்தியிற் பழுத்த அவருடைய மாதா வட
அமெரிக்காவிலுள்ள அஞ்ஞான மதஸ்தராகிய இந்தியருக்
குட் சுவிசேஷத்தைப்போதித்துக்கொண்டிருந்த எல்லியத்
(Elliot) பிறேனட் (Brainard) முதலானகுருமாரைப்பற்றி
ப் பலமுறையும் அவருடன் பேசிப்பேசிவந்தாள். ஒரு கு

ருவாய்த் தேவ ஊழியத்தை நடப்பிக்கும்படி என்னுடைய அருமையான புத்திரனாகிய சாமுவேலைத் தேவனுக்கு நைவேத்தியமாய் ஒப்புக்கொடுத்தேனென்று தன்னுடைய சிநேகிதருக்கு ஒருமுறை செந்தளிப்பான முகத்துடன் இவருடைய சமுகத்திற் சொன்னாள். இவ்வார்த்தைகள் அச்சிட்டாற்போல் அவருடைய மனதிற் பதிந்தன. ஒருக்காலும் மங்கா எழுத்துப்போல் அவருடைய இருதயத்தில் வரையப்பட்டன. அவர்இந்த நேர்த்திக்கடனை ஒருக்காலும் மறந்துபோகவில்லை. அவர் இருபது பராயமாயிருந்தபொழுது தம்முடைய பிதாவைப் பார்த்து, என்னருமையான பிதாவே, என்னுடைய சீவியத்தின் எஞ்சிய நாட்களில், அஞ்ஞானப்படலத்தினால் மூடப்பட்டிருக்கும் விக்கிரகபத்தருக்குட் போய் மெய்ஞ்ஞானச் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதுபோல் என்னுடைய இருதயத்துக்கு இன்பத்தையுஞ் சந்தோஷத்தையுங் கொடுக்கக் கூடிய உத்தியோகம் இவ்வுலகத்தில் வேறொன்றுமில்லையென்று சொன்னார். இதினால் அவருடைய மனவுணர்ச்சிகள் எவ்வகைப்பட்டனவென்பது யாவருக்கும் பிரத்தியட்சமாய் விளங்கும். தன்னுடைய சென்ன தேசத்திலிருக்கும் இந்தியருக்கல்ல, பிரதேசங்களிலிருக்கும் விக்கிரக பத்தருக்கே இரட்சணியவழியைக் கூறுவது, அவருடைய பேராசை. விசேஷமாய் அஞ்ஞானக்காரிருள்மொய்த்த ஆபிரிக்காவிற் சுவிசேஷ ஒளியை நாட்டும்படி அபிப்பிராயங்கொண்டார். தம்முடைய பெற்றாருடன் இதைப்பற்றிப் பேசினார். தாயானவள் அதைக் கேட்டு, என் நேசபுத்திரனே, நீ என்னைவிட்டுப் பிரிந்தால் நான் மனம்பொறுத்திருப்பது எப்படியென்று தாரை தாரையாய்க் கண்ணீர்விட்டுச் சொன்னாள். அதற்கு அவர், ஆச்சி, ஆச்சி, நான் சிறுவனாயிருந்தபொழுது என்னைத் தேவனுக்கு நைவேத்தியமாய் ஒப்புக்கொடுத்துவிட்டீரென்று நீர் சொன்னதை மறந்துவிட்டீராவென்று கேட்க, அவள் பெருவாய் பெருஞ்சத்தமிட்டு அழுதாள். அன்றுமுதல் அவள் அவர் பிறதேசங்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கப் போவதற்கு விரோதமாய் யாதொன்றும் பேசினதில்லை. தான் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்கு இயன்றவராக்கத் தகுந்த கல்வியைக் கற்கும்படி, ௲அ௱௬௰ம் ஆண்டு லௌகிக வேலைகளை விட்டு ஓர் வித்தியாசாலைக்குப் போனார். வித்தியாசாலையிற் படி

த்தபொழுது பயபத்தி நிறைந்த நெஞ்சனுயிருந்தார். தன் தோழருக்குட் பத்தியை நாட்டுவதற்கும், வளர்ப்பதற்குமேற்ற வழிகளைப் பிரயோகித்தார். அஞ்ஞானிகளுக்குக் குருமாரை அனுப்புகிற விஷயத்தைப் பற்றி அதிகமாய்ச் சிந்தித்துச் செபம்பண்ணினூர். ஒருமுறை தன் தோழரில் இருவரை உலாத்தும்படி மனிதர் அதிகமாய்ப் புழங்காத வயல்வெளிக்கு அழைத்துக்கொண்டுபோனூர். அவர்கள் மூவரும் ஒரு வைக்கோற்பட்டடைக்குச் சமீபமாய் உளுக்கார்ந்திருந்து உபவாசத்திலும், செபத்திலும், அன்றையிற்றினத்தைச் செலவழித்தார்கள். அஞ்ஞான மதஸ்தருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதைப்பற்றி ஒருவரோடொருவர் சம்பாஷித்தார்கள். அவருடைய சிநேகிதரிருவருந் தாங்கள் இதற்குமுன் இதுவிஷயத்தைப்பற்றித் தியானித்துத் தங்களைத் தெய்வ ஊழியத்துக்குக் கையளித்திருக்கிறூர்களென்று அவர்கள் சொன்னதை அவர்கேட்டு ஆச்சரியவசத்தனூனூர். அதற்காக மனம் மகிழ்ந்து தேவனுக்குத் துதிசெலுத்தினூர்.

பாவத்தில் அமிழ்ந்தி நாசப்படும் விக்கிரக பத்தருக்குள் இரட்சண்ணிய ஆற்றைத் திறந்து பாய்ச்சவேண்டுமென்ற தரும சிந்தையை, பலருடைய இருதயங்களில் ஒரேநோத்தில் தேவன் எழுப்பிவிட்டது, அவருடைய இரக்கச்செயலன்றிப் பிறிதொன்றல்ல. இந் நன்னோக்கத்தை நிறைவேற்றுகிறதற்குந் திட்ப நுட்ப சட்டங்களை உண்டாக்குவதற்கும் ஒரு சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. அக்காலத்தில் அச்சங்கத்தாருக்கு மாத்திரமேயன்றிப் பிறர்க்கு இக்காரியம் மறைபொருளாயிருந்தது. அமெரிக்காவிலுள்ள சபையார் இதற்குமுன் பிறதேசங்களுக்குக் குருமாரையனுப்பினதில்லை. அப்படி அனுப்பவேண்டுமென்ற கருத்துச் சிலருடைய மனதில்மாத்திரம் பட்டிருந்தது. இம்முயற்சி அனுகூலப்படுவதற்கு கிறிஸ்தவர்களுடைய மனதை இதற்குச் சாயப்பண்ணுவதே முதன்முதல் செய்யவேண்டிய வேலையாயிருந்தது. இதுநோக்கமாய் இக்காரியத்தின்பேரில்எழுதப்பட்ட இரண்டுபிரசங்கங்கள் அச்சிடப்பட்டுப் பிரஸ்தப்படுத்தப்பட்டன. இப் பிரசங்கங்கள் மூலமாயே தாங்கள் பேசவேண்டிய ஆட்களுடன் சம்பாஷணைபண்ணினூர்கள். திரும்ப வாசாலமான பிரசங்கிகளை இதில் ஏவிவிடும்படி முயன்றூர்கள். மற்றும் வித்தி

யாசாலைகளிற் கற்கும் மாணாக்கருடைய மனதில் இவ்வெண்ணங்கள் நுழையும்படி வழிபண்ணினார்கள். பரோபகார சிந்தையே உருபமாய்த் தரித்த மில்ஸ் என்பவர் இந்நோக்கங் கருதி அடுத்த வித்தியாசாலைக்குப் போனார். அங்கேயிருந்தபொழுது சாந்துவிச்சுத்தீவிலிருந்துவந்த ஒபுக்காயாவென்ற வாலிபனுடன் சிநேகமானார்.

ஒபுக்காயா ௲௭௱௯௨ ம் ௵. சாந்துவிச்சுத்தீவிற் பிறந்தான். அவன் இளைஞனாயிருந்தபொழுது அத்தீவில் நிகழ்ந்த ஒரு யுத்தத்தில் அவனுடைய பெற்றோர் மடிந்துபோனார்கள். உடனே இவன் தன்னுடைய தம்பியை எடுக்கிக்கொண்டு தப்பியோட வகைபார்த்தான். சத்துராதிகள் அவனைத் துரந்து பிடித்தார்கள். அவனுடைய தம்பி ஈட்டியினாற் குற்றுண்டு மரித்தான். ஒபுக்காயா பிடிக்கப்பட்டு அவனுடைய பெற்றோரைக்கொன்ற துரோகியினுடைய வீட்டில் மறியலாயிருந்தான். சிலநாட் சென்றதின்மேல் அத்தீவில் பூசாசாரியாயிருந்த அவனுடைய பெரியதகப்பன்அவனைக்கண்டு வீட்டுக்குஅழைத்துக்கொண்டு போனான். அவனை அவர் பட்சமாய் நடத்தினும் அவன் மனப் பாக்கியமற்றவனாயிருந்தான். அவன் சொன்னது, மறுபிள்ளைகள் என்னுடன் கைகோத்துப் புளகித்தமாய் விளையாடின பின்பு செந்தழிப்பான முகங்களுடன் தங்கள் வீடுகளுக்குத் திரும்புகிறார்கள். ஆனால் நானோ கண்ணீர் சொரிந்துகொண்டு திரும்புகிறேன். எனக்கு வீடுமில்லை, தாயுமில்லை, தகப்பனுமில்லை, தாய்தகப்பனைப்பற்றிய சிந்தையேயன்றி வேறொன்றும் என்னை அடிமைக்கொண்டாளவில்லை என்றான். கடைசியாய்த் தன்னுடைய சென்மதேசத்தை விட்டுப் பிறதேசங்களுக்குப் போகவேண்டுமென்று எண்ணி அமெரிக்காத் தேசத்துக்குப் பயணமான ஒருகப்பலிலேறி அங்கே ஒரு பட்டினத்தின் வித்தியாசாலைக்குச் சமீபமாய்ச் சேர்ந்தான். கல்வி கற்கவேணுமென்ற பேராசை நிறைந்தவனாய்த் தன்னுடைய நோக்கத்தை நிறைவேற்றும்படி கல்விச்சாலையில் அங்கும் இங்கும் சுணங்கித் திரிந்தான். முன் சொல்லப்பட்ட மில்ஸ் என்ற தயாளசீலன் இந்த வித்தியாசாலை மாணாக்கரைப் பிரதேசங்களுக்குப் போய்ச் சுவிசேஷத்தைப் பகிரங்கப்படுத்தும்படி எவும் நோக்கமாய் இவ்வித்தியாசாலைக்குட் பிரவேசித்தபொழுது சந்துவிச்சுத்தீவிலிருந்

துவந்த இந்த அஞ்ஞான வாலிபனைக் கண்டார். இந்த வா
லிபன் இப் பரோபகாரியைப் பார்த்து ஐயா, நான் பிறந்
த தீவிலிருக்குஞ் சனங்கள் மிகத் துஷ்டர். மரங்களினால்
உருவாக்கப்பட்ட தேவர்களை ஆராதிக்கிறார்கள். நான்
விவிலியவேதத்தை வாசிக்கப்பழகி என்னுடைய சென்
மதேசத்துக்குப்போய்ப் பரமண்டலத்திலிருக்குந் தேவனை
யே நோக்கிச் செபம்பண்ண வேண்டுமென்று போதிக்க
ஆசிக்கிறேன் என்றான். அமெரிக்காவிலிருக்குந் திருச்ச
பையார் தங்களுடைய கண்களைத் திறந்து பிறதேசங்களி
லிருக்கும் எண்ணிறந்த விக்கிரக தொழும்பருடைய நிலை
பரத்தையறிந்து பரிதபித்துப் பிரலாபித்துத் தேவனைநோக்
கி ஓலமிடுஞ் சமையத்தில் அவர்களுடைய அனுதாப உ
ணர்ச்சிகளை மென்மேலும் அதிகரிக்கப்பண்ணும்படி இ
வ்வேளை அஞ்ஞான வாலிபனைத் தேவன் தம்முடைய தி
ருவுளச்செயலில் அனுப்பினது எவ்வளவு ஆச்சரியத்தின்
மேலாச்சரியம். தேவனுடைய திவ்விய ஆலோசனைகளை
வகையறுக்கக்கூடியவன் யாவன்.

மில்ஸ் என்பவர், ௲௮௱௰ம் ஆண்டு வேதசாஸ்திரசாலை
யிற் படிக்கத் தொடங்கினார். அங்கே அவர் முன் படித்
த கல்விச்சாலையிற் தான் சிநேகமாயிருந்தவர்களிற் சி
லரும் படித்துக்கொண்டிருந்தார்கள். அவர்களும் இவ
ருடன் கூடப் பிரதேசங்களிலிருக்கும் அஞ்ஞானமதஸ்த
ருக்குட் சுவிசேஷத்தை நாட்டவேண்டுமென்ற ஆவலுள்
ளவர்களாய் அதற்காகத் தங்களாலான உதவியொத்தாசைக
ளைச் செய்வோமென்று எண்ணிக்கொண்டு தங்களுடைய
உவாத்திமாருடன் யோசனைபண்ணினார்கள். உவாத்தி
மாரும் இந்நோக்கம் நிறைவேறினாலோவென்று ஆசையா
ய் அவர்களை அவர்கள் நோக்கத்தில் தைரியப்படுத்தினார்க
ள். அவர்கள் இதைப்பற்றிப் பிரார்த்தனைபண்ணி இதை
அனுகூலமாக்கும்படி அந்நாட்களிற் கூடவேண்டியிருந்
த போதகர்களுடைய கூட்டத்தில் தங்கள் நோக்கங்களை
அறிவிப்போமென்று தீர்மானித்துக்கொண்டார்கள். இந்
த வாலிபனுடைய நன் முயற்சிகளை நன்றாயறிந்த அதிகீ
ர்த்திப்பிரதாபரான போதகர்கள் இருவர் மேற்சொல்லிய
கூட்டத்துக்கு முதனாட் புறப்பட்டுக் கூடிப்போனார்கள்.
அவர்கள் வழியிற் போகையில் இத்திவ்விய விஷயத்தை
ப்பற்றிப் பலவாறாயோசித்தார்கள். இந்நோக்கமாய் ஒரு

தளேறி மனப்பாக்கிய மற்றவனாகிறான். “தேவனே: பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்” என்று, அல்லது: “கர்த்தாவே, என் அக்கிரமம் பெரிது; உம்முடைய நாமத்தினிமித்தம் அதை மன்னித்தருளும்” என்று பிரார்த்தித்து ஓலமிட அவன் ஏவப்படுகிறான். எல்லா மனுஷரும் எவ்வளவாயாவது இப் பாவப்பாரத்தையும் இத்துடனே குற்றத்தையும் நிர்ப்பாக்கியத்தையும் உணர்கிறார்கள். ஆதலாற்றான் அவர்கள் பலிசெலுத்தி, யாத்திரைபண்ணி, உபவாசித்து, பாடனுபவித்து, அரும்பெரும் பிரயாசமடைந்து, இவைகளினாலே தங்களுக்கு மன ஆறுதலையும் பரமானந்தத்தையும வருவிக்க வகைபார்க்கிறார்கள். என்னசெய்தும், அவர்களுடைய பாவங்களைப் போக்கி அவர்களை மனப்பாக்கியராக்கும் புத்தகம் விவிலிய நூலேயன்றி வேறொன்றும் இல்லை. விவிலியபுத்தகமே இந்த நன்மையைச் செய்யும் வல்லமையுள்ளது.

பாவ உணர்ச்சியே மனுஷனுக்கு மகாபெரிய பாரம். எல்லாமனுஷரும் இப்பாரத்தைச் சுமந்துகொண்டு திரிகிறார்கள். ஆயினும் ஒவ்வொரு மனுஷனுடைய மனச்சாட்சியிலுமிருந்து இப்பாரத்தை இறக்கத்தக்கதே விவிலியநூலின் வல்லமை. எல்லாக்காலங்களிலும், எல்லாத்தேசங்களிலும், எல்லாமனுஷரிடமிருந்தும், பாவப்பாரத்தை நீக்கத்தக்கது விவிலியநூலே. இது “எல்லாமனுஷரும் பாவஞ்செய்து, தண்டனைத்தீர்ப்புக்கு உட்பட்டிருக்கிறார்கள்” என்று சொல்லுகின்றது. இதன் உண்மையை நாம் எல்லாரும் உணருகிறோம். ஆனாலும் “பரமண்டலத்தில் இருக்கிற நமது பிதா, பாவத்தில் விழுந்து வழிதப்பித்திரிகிற மனிதசாதியாரின்மேல் இரங்கி, ஒருவனாவது அழிந்துபோவதை விரும்பாமல், தமது ஒரே பேறான குமாரனைப் பாவத்துக்குப் பலியாகவும் மீட்புப்பொருளாகவும், பாவிகளுக்குப் பிணையாளியாகவும் தந்திருக்கிறார்; எல்லாமனிதரும் அவரை நம்பி இரட்சிப்படையலாம்” என்றும் விவிலியபுத்தகம் சொல்லுகின்றது. பாவத்தின் வல்லமையினின்று எல்லாமனிதரையும் இழுத்து, தேவனிடம் அவர்களை முழுதும் சேர்க்கக்கூடிய காந்தம் இதுவே. இயேசு: “நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது, எல்லாரையும் என்னிடத்தில்

சங்கம் ஸ்தாபிக்கப்படுவது நலமென்றும், பிரதேசங்களிற்
சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க ஆசித்திருக்கும் வாலிபரை
அனுப்புவதும், அந்தநோக்கமாய்ப் பணஞ் சம்பாதித்து அ
னுப்பப்பட்டவர்களைத் தாபரிப்பதுமே அதின் நோக்கமா
யிருக்கவேண்டுமென்றுந் தங்களுடைய கூட்டத்திற்பேசு
ம்படி தீர்மானம்பண்ணிக்கொண்டார்கள். போதகர்களு
டைய சங்கம், ௲௮௱ம் ஆண்டு ஆனி மாதம், ௨௭ந் திகதி
கூடிற்று. கூட்டத்துக்கு அடுத்தநாள் மேற்சொல்லிய வா
லிபரில் நால்வர் இச்சங்கத்தவர்களுக்கு முன் போய்த் த
ங்கள் விண்ணப்பப் பத்திரங்களைக் கொடுத்தார்கள். அ
வர்கள் விண்ணப்பமாவது ;

"இதன்கீழ்க் கையொப்பமிட்டிருக்கிற வேதசாஸ்திரச்
சாலை மாணாக்கராகிய நாங்கள் சங்கைபொருந்த போதகர்க
ளாகிய உங்களிடத்திற் சில பல காரியங்களைச் சொல்லவு
ம் வினவவும் விரும்புகிறோம். அஞ்ஞான இருளில் அ
மிழ்ந்தியிருக்கும் விக்கிரகத் தொழும்பருக்கு மெய்ஞ்ஞா
ன ஒளி பிரகாசிக்கும்படி செய்யவேண்டியது இன்றிய
மையாத அவசரமும் எங்கள்மேல் விழுந்த கடனென்றும்
நெடுநாளாய் யோசித்து எண்ணியிருக்கிறோம். இந்த ந
ன் முயற்சி அனுகூலப்படுமோ, தவறுமோ, விருத்தியாகு
மோ, குன்றுமோ, விலங்கங்கள் நேரிடுமோ, இலேசில்
நடைபெறுமோவென்று செபத்தியானத்துடன் பலவாறு
ஆலோசித்தோம். இவ்வண்ணம் ஆலோசித்ததின்மேல் எ
ங்களுடைய சீவியாந்தம் வரைக்கும் தேவ ஊழியத்துக்கு
எங்களை நேர்கடன்பண்ணி அவருடைய திருவுளச்சித்தத்
தில் இந்த நோக்கமாய் எங்களை அழைக்கும்பொழுது தே
வஊழியத்தில் ஆரம்பிப்போமென்று தீர்மானம்பண்ணியி
ருக்கிறோம்."

மேலும், "சங்கத்தவர்கள் பின்னுற் காணப்படும் வினுக்க
ளுக்குத் தங்கள் தீர்க்காலோசனையையும், எண்ணத்தையு
ம் சொல்லும்படி தாழ்மையாய்க் கேட்டுக்கொள்ளுகிறோ
ம். உங்கள் யோசனையின்படி, பிரதேசங்களுக்குக் குரு
மாரை அனுப்புவது நல்லதோ? அல்லது அது கூடாது,
ஒரு கனவுபோலிருக்கின்றதென்று எண்ணி, இகழ்ந்து எ
ங்கள் மனதிலிருந்து அவ்வெண்ணத்தை அகற்றிவிடுவோ
மோ? அவ்வெண்ணஞ் சரியானதும் நல்லதுமாகில் எவ்
விடத்தில் முதற் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படவேண்டி

யது? கிழக்குக்கண்டத்திலோ? மேற்குக்கண்டத்திலோ? எவ்விடத்துக்குப் போனாலும் இந்நோக்கமாய் ஒரு சங்கம் உண்டாகிப் பிரதேசங்களுக்குப்போகுங் குருமாரைத் தாபரிக்குமோ? அல்லது இவ்விஷயத்தில் உதவி செய்யும்படி ஐரோப்பாவிலிருக்கிற சங்கங்களுக்கு விண்ணப்பப்பத்திரம் எழுதலாமோ? நாம் இத்தொழிலிற் கையிடுவதற்கு முன் என்னென்ன காரியங்களைச் செய்வது அவசியம்?

இதன்கீழ்க்கையொப்பமிட்டிருக்கிறவர்களாகிய நாங்கள் வாலிபராயும் பழக்கமற்றவர்களாயுமிருக்கிறபடியாற் சபைகளின் முதியோராகிய உங்களிடத்தில் மகா தாழ்மையுடன் ஆலோசனை கேட்கிறோம்.'' :

இவர்கள்எழுதின விண்ணப்பப்பத்திரத்தில் ஆறுபெயர் கையொப்பமிட்டார்கள். ஆனால் பத்திரத்தைக் கொடுக்குமுன் சங்கத்தவர்கள் ஒருமுறையில் ஆறுபெயரைப் பிரதேசத்துக்கனுப்பித் தாபரிப்பது பிரயாசமென்று தங்களுக்குள் நினைத்து இருவர் தங்களுடைய கையொப்பத்தைக் கிறுக்கித் தள்ளிப்போட்டார்கள். இவர்களுடைய விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி சங்கத்தின் காரியகாரரை நியமனம்பண்ணினார்கள். அவர்கள் அதிகமாய்ச் செபத்துடனே தீர்க்காலோசனைபண்ணினதின்மேற் பிரதேசங்களுக்குக் குருமாரை அனுப்புஞ் சங்கமொன்று (American Board of Commissioners for Foreign Missions) ஸ்தாபிக்கவேண்டுமென்று சொன்னார்கள். அஞ்ஞானத்தேசங்களிற் சுவிசேஷத்தைப் பிரபலியப்படுத்துகிறதற்கு ஏற்ற வழிவகைகளை யோசித்தும் அவைகளைச் சித்திபெறநிறைவேற்றுகிறதற்குஞ் சங்கமொன்று ஸ்தாபிப்பது இன்றியமையாத அவசரமாயிருந்தது. ௲௮௱௰ம் ஆண்டு ஆனிமாதம் ௨௯ந் திகதி இச்சங்கம் ஆரம்பமாயிற்று. முதன்முதல் ஒன்பது பெயரை அச்சங்கத்தை நடத்தும்படி நியமித்தார்கள். அவர்களில் ஐந்துபெயர் மாத்திரம் அடுத்த புரட்டாசிமாதம் முதன்முறை கூட்டங் கூடினார்கள். அவர்கள் திட்ப நுட்ப ஒழுங்குச்சட்டங்களை உண்டாக்கி, உலகமெங்குஞ் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பது கடமையெனக் காட்டும் ஓர் நிருபத்தையுங் கிறிஸ்தவர்களுக்கு எழுதினார்கள். இவ்வாண்டு மகோற்சவங் கொண்டாடும் இப்பெரிய சங்கத்தின் ஆதிதொடக்க விருத்தாந்தமிதுவே. விக்கிரகத்தொழும்பர் மெய்ஞ்ஞான இரட்சண்ணிய வழி

யைக் கண்டடையவேண்டுமென்ற பேராசை சில வாலிபக் கிறிஸ்தவர்களுடைய இருதயங்களிற் குடிகொண்டிருந்தபடியினாற்றான் இச்சங்கம் உதித்தது. தேவன் தம்முடைய சனங்களுடைய இருதயங்களிற் பரோபகார சிந்தையைச் செனிப்பிப்பாரென்ற தேவவிசுவாசத்துடனும், இருதயங்களில் கனிந்து ஒழுகுகின்ற காதலான பிரார்த்தனையுடனும், பலநாள் நீர்க்காலோசனைபண்ணினதின்பின்பு சத்த சத்திய சுவிசேஷத்தைக் கூறுகிறதற்கான ஒழுங்குகள் உண்டாக்கப்பட்டன.

சங்கம் ஸ்தாபிக்கப்பட்டபின்பு, பிற தேசங்களுக்குப் போகும் தேவபத்தரைத் தாபரிக்கிறதற்குப் போதிய பணஞ்சேகரிப்பது சங்கத்தவர்களுடைய கடமையாயிருந்தது. நாலு வாலிபர் பிறதேசங்களுக்குப் போகிறதற்கு ஆயத்தமாயிருந்தார்கள். இப்பொழுது ஆரம்பமான சங்கத்தவர்கள் தங்களைத் தாபரிக்கக்கூடிய பணஞ்சம்பாதிக்குங் காலபரியந்தம் இங்கிலாந்திலிருக்குஞ் சங்கங்களுடைய சகாயங்களைப் பெறுதல் நன்றெனயோசித்தார்கள். முன்சொன்ன வாலிபரில் ஒருவராகிய யட்சன் (Judson) என்பவர் சங்கத்தின் உத்தியோகஸ்தருடன் யோசிக்கும்படி இங்கிலாந்துக்குப் பிரயாணமானார். அவ்விடத்தில் யாதொரு திருத்திகரமான ஒழுங்குகள் பண்ணக்கூடாமையால் அமெரிக்கன்போட் சங்கத்தவர்கள்தானே அந்நான்கு வாலிபரையுந் தங்களுடைய பராமரிப்பின் கீழாய்ப் பிரதேசங்களுக்கு அனுப்பும்படி தீர்மானம்பண்ணினார்கள்.

௲அ௱௰உ-ம் ஆண்டு தை மாதம் ஒரு கப்பல் கற்குத்தாவுக்குப் பிரயாணம்பண்ணவிருந்தது. இவர்கள் இக்கப்பலிற் பிரயாணம்போக ஆயத்தமாயிருந்தார்கள். இம்முறை போகத் தாமதப்பட்டால் இன்னுமொரு கப்பல் பயணப்பட அநேக மாசஞ் செல்லக்கூடுமென்று பயந்தார்கள். ஆனாற் சங்கத்தில், உ௱௫௰. பவுண்மாத்திரமிருந்தது. நால்வரையுமனுப்பினால், வழிச்செலவை நீக்கிப் பிறசெலவுகளுக்கும், ஒரு வருஷச் சம்பளத்துக்கும், ௲ பவுண் தேவை. சங்கத்தின் காரியக்காரர், செபத்துடன் ஆலோசனைபண்ணித் தங்களிடத்திலிருக்கும் பணம் நால்வரையும் அவர்கள் சமுசாரங்களையுந் தாபரிக்கிறதற்குப் போதாது; நீங்கள் உங்களுடைய சமுசாரங்களை விட்டுத் தனிமையாய்ப் போங்கள்; சமுசாரத்துடன் போகில் அவை

வருஷச் சம்பளத்துடன் மாத்திரம் போங்களென்று தீர்ப்புச்சொன்னார்கள். இந்த நால்வரையுந்தவிர இன்னுமொரு வாலிபன் தானும் மிஷனரியாய்ப் போகவேண்டுமென்ற மன வாஞ்சையைக் காட்டினான். அவன் இந்தவேலைக்குத் தகுந்தவன். அவன் போகவேண்டுமென்று வாதாடினான், ஆனால் பணமில்லை. பின்னைச் சங்கத்தின் காரியக்காரர், அந்த வாலிபனைப் பார்த்து, என்ன செய்யவேண்டும்? எங்களிடத்திற் பணமில்லை, நாங்கள் உன்னை அனுப்பக்கூடாதென்று சொல்லவாமோ?. அல்லது, எல்லாவற்றையும் விட்டுப்போகவேண்டுமென்ற சிந்தையை உன்னுடைய இருதயத்தில் தேவன் விட்டார்; அப்படியே தம்முடைய தேவதாசரின் இருதயங்களிலும், உன்னைத் தாபரிக்கிறதற்குப் போதிய பணத்தைக் கொடுக்கவேண்டுமென்ற எண்ணத்தைக் கிழப்பிவிடுவாரென்ற திட நம்பிக்கையுள்ளவர்களாயிருக்கிறோம்; நீ தடையின்றிப் போகலாமென்று சொல்லலாமோ? என்று யோசித்து, இவனையும் அனுப்பவேண்டுமென்று தீர்மானம்பண்ணினார்கள். ௧௮௱௰௨ஆம் ஆண்டு மாசி மாதம் ௬ந் திகதி சங்கை போந்த நியுஎல் (Newell) யட்சன் (Judson) நொற் (Nott) ஆல் (Hall) இறைஸ் (Rice) என்ற ஐவரும் ஆயிரத்தாயிரவர் சமுகத்திற் குருமாராய் அபிஷேகம்பண்ணப்பட்டு அந்த மாதத்திற்றானே கற்குத்தாவுக்குப் பிரயாணமானார்கள். இந்த நவமான செய்தி மின்கெதியிலும் அதிகெதியாய் அமெரிக்கா முழுவதிலும் பரந்தது. எவருக்குள்ளும் பெரிய அதிர்ச்சியை உண்டாக்கிற்று. அநேகர் தங்களுடைய திரவியசாலைகளைத் திறந்து தங்கள் பணத்தைத் தருமப்பெட்டியில் எறிந்தார்கள். ௫௨௱. பவுனுக்கு மேற்படக் கூடிற்று.

இற்றைக்கு ஐம்பது வருஷங்களுக்குமுன் இந்தச் சங்கம் பிறதேசங்களுக்குக் குருமாராக ஐந்து புருஷர்களையும் மூன்று ஸ்திரிகளையும் மாத்திரம் அனுப்பினார்கள். அந்த வருஷம் சங்கத்தின் வருமானம், ௧௨௱ பவுண். அப்பொழுது யாதொரு மிசியோன் ஸ்தானங்களில்லை. கல்விச்சாலைகளில்லை. அச்சு இயந்திரசாலைகளுமில்லை. செபத்துடனும் விசுவாசத்துடனும் இப் புதுத் தொடக்கத்தை ஆரம்பித்தார்கள். தேவன் சம்பூரணமாய் அவர்கள் முயற்சியை ஆசிர்வதித்தார்.

ஆனால் சங்கத்தவர்களுடைய விசுவாசத்தைப் பரீட்சிக்கத்தக்கதாய் இன்னும் ஒரு இக்கட்டு உண்டாயிற்று. அனுப்பப்பட்டவர்கள் அஞ்ஞானத் தேசங்களின் கரைகளில் இறங்கினவுடன் அத்தேசங்களின் அரசாட்சியார் அவர்கள் அங்கே இருக்கப்படாது; திரும்பத் தங்களுடைய சென்மதேசத்துக்குப் போகவேண்டுமென்று கட்டளைபண்ணினார்கள். குருமார் விண்ணப்பங்களை எழுதினார்கள்; நியாயம் உத்தரித்தார்கள்; மன்றாடினார்கள்; இவைகளினால் யாதொரு பயனுமில்லை. அவர்களுக்கு மிசியோனை ஸ்தாபிப்பதற்கு உத்தரவுகொடாமலிருந்தது மாத்திரமல்ல, நிஷ்டூரமாய்க் கலகப்படுத்தினார்கள். அப்படியாயினும் இவர்கள் தைரியவீனப்படவில்லை. இந்தியாவில் இரட்சண்ணியவழியை விட்டு அழிந்துபோகும் அஞ்ஞானிகளைப் பற்றிய இரக்கமான சிந்தனைகள் எள்ளளவேனும் அவர்களிற் குன்றிப்போகவில்லை. பிரதேசங்களுக்கு யாதொரு விக்கினமின்றித் தங்களை அனுப்பின சீவனுள்ள தேவன் தங்களுக்கு அஞ்ஞான மாளிகையின் கதவைத் திறந்துவிடுவாரென்ற திட நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தார்கள். எல்லாரும் கற்குத்தாவை விட்டு மறுஇடங்களுக்குப் பாய்வலித்தார்கள். ஒருவர் கொழும்புக்கும், இருவர் பம்பாய்க்கும், பிரயாணமானார்கள். மற்ற இருவருந் தங்களை அனுப்பின சங்கத்தவர்களை விட்டுப் பிரிந்து பிரமதேசத்துக்குப் போனார்கள்.

பம்பாய்க்குப் போன இருவருக்கும் அரசாட்சியார் அங்கேயிருக்க இடங்கொடாமல் இங்கிலந்துக்குப் போகக் கட்டளைபண்ணினார்கள். அவ்விருவரும் அரசாட்சியாருக்கு விண்ணப்பங்களை எழுதினாலும், அவர்கள் சம்மதிக்கவில்லை. ஆகையால் தேவன் அவர்களுக்கு ஒரு பாதையைத் திறக்கும் வரைக்கும் கொழும்பு நகரத்துக்குப் போய் வாசம்பண்ணுவது நன்றெனத் தீர்மானம்பண்ணி, இரகசியமாய்க் கப்பலேறிக் கொச்சியிற் சேர்ந்தார்கள். அங்கே கொழும்புக்குப் போகக் கப்பல் விசாரித்துக்கொண்டிருக்கையிற் பம்பாய்த் துரைத்தனத்தார் அவர்களை மறியற்படுத்தித் திரும்பவும் பம்பாய்க்குக் கொண்டுபோனார்கள். அவ்விடமிருந்து இங்கிலந்துக்குப் போகிறதற்குக் கட்டளைபண்ணினார்கள். அவர்கள் இங்கிலந்திற்குப்பாய்வலிக்கிறதற்கு இரண்டொருநாளைக்குமுன் மறுபடியும் மகாரா

சாவுக்கு முன்னூட்டக் கடதாசி எழுதி அனுப்பினார்கள் அவர் தமக்கு மேலாயிருக்கும் அதிகாரிகளிடத்திலிருந்து மறுமொழி பெற்றுக்கொள்ளும் வரைக்கும் அவ்விடத்திற் றங்வாசம்பண்ணலாமென்று பட்சமாய் உத்தரமருளினார்.

இந்தியாவிற் குருமார் யாதொரு விக்கினமின்றி நிலைபரமாயிருக்கலாமென்று ௲௮௱௰௩ம் ஆண்டு தீர்க்கமான மறுமொழி அரசாட்சியாரிடத்திலிருந்துகிடைத்தது. அமெரிக்காவை விட்டு பம்பாயில் மிசியோனை ஸ்தாபிக்கிறதற்குமுன், நாலுவருஷங்களாய்ச் சோதனைகளும். வில்லங்கங்களும் எதிரிடைகளும் அவர்களுக்கு நேரிட்டன. இவ்வண்ணம் பம்பாயில் மிசியோனை ஸ்தாபிக்கிறதற்கு முன் அமெரிக்காவிலிருக்குந் தேவபத்தருடைய நெஞ்சங்களிற் பரோபகார சிந்தையாகிய தீபம் சுடர் எறிந்து பிரகாசித்தது. தருமப்பெட்டிகள் தருமச் சிந்தையை விளக்கும் காணிக்கைகளினால் நிறைந்தன.

இன்னுமொரு மிசியோனை ஸ்தாபிக்க வேண்டுமென்று தீர்மானம்பண்ணி இலங்கைத்தீவைத் தெரிந்துகொண்டார்கள். அப்படி, ௲௮௱௰௬ம் ஆண்டு ஐப்பசி மாதம், ௨௮ந் திகதி நாலு புருஷர்களும் மூன்று ஸ்திரிகளும் யாழ்ப்பாணம் வருகிறதற்கு அமெரிக்காவிலிருந்து பாய்வலித்தார்கள்.

சென்றுபோன ஐம்பது வருஷங்களிலும் நிகழ்ந்த சம்பவங்களைச் சற்றே சீர்தூக்கிப்பார்ப்போமாக. சிறு விதை பெரு விருட்சமாய் வளர்ந்து அட்டதிக்குகளிலும் அதின் கொப்புகள் படர்ந்திருக்கும் விதம் எப்படியென்று கவனிப்போமாக. ஆனால் நாம் மோட்சமாளிகையிற் பிரவேசித்துத், தங்களுடைய கின்னரங்களைக்கொட்டி இனிய தேவகீர்த்தனங்களைப் பாடுந் தேவதூதர்களினாலுஞ் சம்மனசுகளினாலுஞ் சூழவரப்பட்டவராய்ச் சிங்காசனத்தில் வீற்றிருக்கும் பரம காருண்ணிய தேவனின் ஒளி எங்களுடைய நெஞ்சங்களிற் காலும்வரைக்கும் அந்த உன்னத விருட்சங் கொடுத்த கனிகள் எம்மட்டென்றும் நடந்த நன்மைகள் எவ்வளவென்றும், உரைப்பது கூடாது. ஆயினும் இச்சங்கத்தின்வளர்ச்சியையுந் தேவன் இதற்கு திறந்திருக்கும் வழிகளையுங் கவனிப்போமாக.

சென்றுபோன ஐம்பது வருஷங்களிலும் ஏறக்குறைய முப்பது மிசியோன்கள் ஸ்தாபிக்கப் பட்டன. ௭௯. ஸ்தானங்களிற் குருமார் இருக்கிறார்கள். ௯௱௯௧. குருப்

பட்டந்தரித்தமிஷனரிமாரும், ௨௩· வைத்தியர்களும், ௱௪௮· உபாத்திமார், அச்சியந்திரசாலைமுதலாளிகளும், ௯௱௩௭. ஸ்திரிசனங்களுமாக, ௲௨௱௰௭. பேர் அமரிக்காவிலிருந்து அனுப்பப்பட்டிருக்கிறார்கள். வடஅமெரிக்காவில் இருக்கும் இந்தியருக்குட் பிரயாசப்படுங் குருமாரும் இத்தொகையில் அடங்கும். இவர்களிற் பலர் தாங்கள் அனுப்பப்பட்ட இடங்களிற்றானே, மரித்துவிட்டார்கள். சிலர் நோய்கொண்டு சுகமிழந்து தங்கள் சென்மதேசத்திற்குத் திரும்பினார்கள். ௲௮௱௰௧ம் ஆண்டு சங்கத்தின்வரவு, ௨௱. பவுண்· ஆனால், ௫௬ம் ஆண்டு ௬௮௲. பவுண். சென்றுபோன ௪௬. வருடங்களிலும் இச்சங்கத்தவர்கள் செலவிட்ட முழுத்தொகை, ௰௭. லட்சத்து, ௮௯௲௩௱௨௭· பவுண்.

மேற்சொல்லப்பட்ட அவ்வளவு குருமாருந் தங்களுடைய சீவனை ஒப்புக் கொடுத்ததினாலும் இவ்வளவு பெருந் தொகையான பணத்தைச் செலவழித்ததினாலும் உண்டான பலன் எம்மட்டென்று திர்க்கமாய்ச்சொல்வது அருமை. அப்படியாயினும் ஆயிரத்தாயிர ஆத்துமாக்கள் குணப்பட்டு எங்கள் கிருபாமூர்த்தியாகிய யேசு இரட்சகருடைய திரு இரத்தத்தால் இரட்சிக்கப்பட்டார்களென்று நம்புகிறோம்· இலட்சாதிலட்சம்பேர் இரட்சணிய வழியின் மங்கல செய்திகளைக்கேட்டுப் பிரியமுள்ள எவனுஞ் சீவ நீரைக் கிரயமின்றி இலவிசமாய் அருந்தக்கடவனென்ற அழைப்புக்குச் செவிகொடுத்து அங்கிகரித்தார்கள். கோடாகோடியானவர்கள் இச்சங்கத்தினால் ஸ்தாபிக்கப்பட்ட வித்தியாசாலைகளில் மெய்ச்சாஸ்திர சூத்திரங்களையும் விவ்விலிய வேதத்தையுங் கற்றுச் சொல்லற்கரிய லௌகீக நன்மைகளை அனுபவிக்கின்றார்கள். பலவகையான புத்தகங்கள் எழுதப்பட்டு வித்தியாசமான பாஷைகளில் அச்சிடப்பட்டன· வருஷாந்தம் ௪· கோடி பக்கங்கள் அளவு அச்சிடப்பட்டதாய்க் கணக்கிடப்பட்டிருக்கின்றது·

தேவாமிர்தமாகிய மதுரவாக்குகளை அடக்கியிருக்கும் விவ்விலிய வேதம் பலபாஷைகளிலும் மொழிபெயர்த்து அச்சிடப்பட்டுச் சருவ தேசங்களிலும் பரப்பப்பட்டிருக்கின்றது. இரட்சணிய வழியைக் கண்ட ஒரே யொருவாத்துமா உலகத்திலும், உலகத்திலிருக்குந் திரவியக்

குவியல்களிலும் விலையுயர்ந்ததென்று தேவவாக்குப்போதிக்கின்றது. ஆகவே பெருந்தொகையான பணத்தைச் செலவிட்டாலும் விலைமதித்தற்கரிய பலாபலன்கள் விளைந்தனவென்று யாம் துணிந்து உரைக்கின்றோம்.

இச்சங்கத்தின் ஆதிதொடக்கத்தைச் சுருக்கமாய்ச் சொன்னோம். இச்சங்கத்தவர்கள் செய்த காரியங்களையும் ஒரளவுக்கு விபரித்தோம். இச்சங்கத்தின் தற்காலநிலையைப் பார்ப்போமாக.

தற்காலத்தில் மிசியோன்களின்தொகை, ௨௬. அமெரிக்கன்குருமார் இருக்கும் ஸ்தானங்கள், ௱௨௭. அந்தந்த ஊர்ப்பிறந்தவர்களிருக்கும் ஸ்தானங்கள், ௱௩௧. ஆகவே, ௨௱௫௮ ஸ்தானங்களுண்டு. இந்த ஸ்தானங்களிலிருக்குங் குருப்பட்டந்தரித்த மிஷனரிமார், ௱௭௰. வைத்தியர், ௪. உதவி ஆண்மிஷனரிமார், ௰௪. உதவிப்பெண்மிஷனரிமார், ௨௱௰. ஆகவே, சுவிசேஷத்தைக் கூறும்படி அமெரிக்காவிலிருந்து அனுப்பப்பட்ட மிஷனரிமாரின் தொகை, ௪௱. இவர்களைத் தவிர, ௩௱ அந்தந்த ஊர்ப்பிறந்த உதவிக்காரருமிருக்கிறார்கள். ஐந்து அச்சியந்திர சாலைகளுண்டு. அவைகள் வருஷாந்தம் ௪. கோடி பக்கங்கள்அளவு அச்சிடுகின்றன. ௨௬, வித்தியாசாலைகளில், ௯. மாணாக்கர் கல்விபயிலுகிறார்கள். ௯௱. ஊர்ப்பள்ளிக்கூடங்களில், ௮௯. பாலகர் கல்வி கற்கிறார்கள். இப்பள்ளிக்கூடங்களெல்லாம் இச்சங்கத்தவர்களின் பொறுப்பிலிருக்கின்றன. இச்சங்கத்தைச் சேர்ந்த மிஷனரிமாரினால் நாட்டப்பட்ட ௱௫௰. சபைகளில் திருவிருந்து அனுபவிக்கிற ௨௫௲. கிறிஸ்தவர்களிருக்கிறார்கள்.

கழிந்துபோன கடைசியான பத்து வருஷங்களிலும் வருஷாந்தம் ௫௯௱. பெயர்வீதம் சபையிற் சேர்ந்தார்கள்.

இச்சங்கத்தவர்கள் உலகத்திற் பற்பல பகுதிகளிலும் பற்பல பாஷைக்காரருக்குள்ளுங் குருமாரை அனுப்பியிருக்கிறார்கள். அத்தேசங்களாவன, தென் ஆபிரிக்கா, மேற்காபிரிக்கா, சீனா, இந்தியா, இலங்கை, பார்சியா, துருக்கை, கிரேக்கை, பாசிப்பிக்குச் சமுத்திரத்தின் தீவுகள், வடஅமெரிக்க இந்தியர் இருக்கும் தேசங்கள் முதலானவைகளே. எத்தேசத்திற் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தாலும் ஆத்துமாக்களை இரட்சிக்கவேண்டுமென்பதே அவர்களுடைய நோக்கம். இதற்காகவே பள்ளிக்கூடங்கள் ஸ்

தாபிக்கப்பட்டிருக்கின்றன. புத்தகங்கள் அச்சிடப்பட்டுப் பிரசுரமாகின்றன. சுவிசேஷ பிரசங்கிகள் அனுப்பப்படுகிறார்கள். சபைகள் நாட்டப்பட்டிருக்கின்றன. இச்சங்கத்தவர்களுடைய பிரயாசங்களின் மூலமாய் இகப்பிரயோசனங்கள் அனேகந் தோன்றினாலும் சத்தியமாகிய விதைகளை விதைத்து இரட்சணிய வழியை ஆத்துமாக்களுக்குக் காட்டுவதே அவர்களுடைய விசேஷித்த நோக்கமாம். இச்சங்கம் அனுகூலப்படும்படி ஆச்சரியமானவிதமாய்த் தேவன் ஆசிர்வதித்தார். அதினுடைய கிருத்தியங்கள் அதிகம் விருத்தியடைந்திருக்கின்றன. தேவன் தம்முடைய திருவுளச்செயலின்படி ஆயத்தம்பண்ணியிருக்கும் புதிய ஸ்தானங்கள் காலாகாலங்களில் அதிகரிக்கின்றன. ஆகவே சங்கத்தவர்களுடைய செலவும் அந்தப்பிரமாணமாகவே பெருகுகின்றது. இரட்சணிய வழியைப் பற்றிய நற்செய்திகளை ஒருக்காலுங் கேள்விப்படாத கோடாகோடியானவர்கள் உலகத்திலிருக்கிறார்கள். மற்றச் சங்கத்தவர்களுடன் இசைந்து உலகமெங்கும் நற்செய்திகளைப் பரப்புவதே இவர்களுடைய பேராசை.

பூமியிலிருக்கும் ஒவ்வொருஆத்துமாவுஞ்சுவிசேஷத்தைக்கேட்குங்காலபரியந்தம்அதைக்கூறுவதே அவர்களுடைய நோக்கம். இப்பத்திரத்தை வாசிக்கிற பரோபகாரிகளாகிய உங்களுக்கு, இக்கிருத்தியம் ஒழுங்காய் நடந்தேறும்படி ஏதாகுதல் கொடுக்கிறதற்குப் பிரியமாயிருக்குமல்லவா? லௌகிக காரியங்களில் தேவன் உங்களை விருத்தியடையப்பண்ணுகிறாரே. எல்லாவற்றிலும் மேலாகத் தாம் திருவாய்மலர்ந்தருளிய திவ்விய வாக்கை உங்களுக்குக் கொடுத்திருக்கிறாரே. அறியாமையிற் கிடக்கின்றவர்களுக்கு யேசு இரட்சகரின் சுவிசேஷத்தைஅனுப்பும்படி உங்களிடத்திலிருக்கும்ஆஸ்திபாஸ்திகளிற் சிலவற்றைத் தருமாதீனமாய்க் கொடுக்க ஏவப்படமாட்டீர்களா?

ஏராளமான இகபர பிரயோசனங்களைப் பெற்றுக்கொள்ளும்படி உங்களைத் தகுந்தவர்களாக்கின இச்சங்கத்தவர்களுக்கு உங்களுடைய நன்றியறிதலைக் காட்டும்படி இந்த மகோற்சவ வருஷத்தில் ஸ்தோத்திரக்காணிக்கையைச் செலுத்துவது தகுதியும் நியாயமுமல்லவா?

இப்பத்திரத்தை வாசிக்கிற சிநேகிதர்களே, கிறிஸ்துநாதரில் நம்பிக்கையுள்ளவர்களாயிருக்கிறீர்களா? கிறிஸ்துநாதருக்காகச் சீவிக்கிறீர்களா? அவருடைய இரட்சண்

ணிய வழியை ஏற்று அவருடன் அரசுபுரிவது உங்களுடைய பிரியமா? இல்லாதுபோனால் ஐயையோ! மோசம் போனீர்கள். நீங்கள் பெற்றுக்கொண்ட கல்வியினால் உண்டான பலனென்ன? சங்கத்தவர்களுடைய விசேஷித்த நோக்கத்தை நிறைவேற்றவில்லையே. யேசுநாதரை உங்கள் இரட்சகராய் ஏற்றுக்கொண்டு தேவனுடன் ஒப்புரவாகமாட்டீர்களா? அப்போ, ஆசியா, ஆபிரிக்கா, ஐரோப்பா,அமெரிக்காமுதலான தேசங்களின் நான்குதிக்குகளிலுமிருந்துவந்து காருண்ணிய யெகோவாவின் சிங்காசனத்தைச் சூழநிற்கும் சேனைசமுத்திரமாகிய பரிசுத்தவான்களுடைய கூட்டத்தைச் சேருவீர்கள். உங்களுடைய கின்னரங்களைக் கொட்டிச் சம்பிரமத்துடன் சிங்காசனத்தில் வீற்றிருக்கும் பரமகாருண்ணிய தயாபர கடவுளுக்கு அனவரதகாலமும், மகிமையும், கிருபையும், அதிகாரமுங் கீர்த்தியும் பல்கிப் பெருகுவதாகவென்று ஆனந்தமுழக்கத்துடன் கெம்பீரமாய்ப் பாடுவீர்கள். அப்படிச் செய்கிறதற்குத் தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

---

## யாழ்ப்பாணத்திலுள்ள அமெரிக்கன் மிஷன்.

அமெரிக்கன் போட்சங்கத்தினால் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்ட மிசியோனின் அடிமுடியான வரலாற்றைச் சகலரும் அறியாதபடியால் அவற்றை இவ்விடஞ் சுருக்கமாய்ச் சொல்வோம்.

இந்த மிசியோனின் ஆரம்பமாகிய ௲அ௱௰௬ம் ஆண்டில் இறிச்சேட்ஸ், பூர், மெக்ஸ் ஐயர்மாரும் (Rev. Messrs. Richards, Poor, Meigs) அவர்கள் மனைவியர்களும், உவாறன் (Warren) ஐயரும் யாழ்ப்பாணத்துக்கு வந்தார்கள். இவர்கள் தெல்லிப்பழையிலும் வட்டுக்கோட்டையிலும் சுவிசேஷ ஊழியத்தை ஆரம்பித்தார்கள். இந்த எழுபேர்களில் மெக்ஸ் ஐயரும் மனைவியரும் மாத்திரம் இப்போ உயிரோடிருக்கிறார்கள்.

௲அ௱௰௯ம் ௵ வேறும் நாலு சமுசாரங்கள் வந்தன. அவர்களில் இஸ்போல்டிங் ஐயரும் (Rev. L. Spaulding) மனைவியரும், உவின்சலோ, (Rev. M. Winslow) ஐயரும் மாத்திரம் இபபோ உயிரோடிருக்கிறார்கள்.

இழுத்துக்கொள்ளுவேன்" என்றார். அப்போஸ்தலனாகிய பவுலும், தன் அனுபவத்தைக் கொண்டு: "நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தே யல்லாமல் வேறொன்றையுங்குறித்து மேன்மை பாராட்டாதிருப்பேனாக; அவரால் உலகம் எனக்குச் சிலுவையில் அறையுண்டிருக்கிறது, நானும் உலகத்திற்குச் சிலுவையில் அறையுண்டிருக்கிறேன் "என்றார்.

பாவப் பாரஞ் சுமந்தவர்களும், ஆசாபாசங்களுக்கு அடிமைகளுமாயிருக்கிற மனிதர் யாவருக்கும் ஒரு இரட்சகரை வெளிப்படுத்தி, அவர் வழியாய்ப் பாவமன்னிப்பையும் சமாதானத்தையும் அவர்களிருதயத்தில் அருளி:

"பிதா ஐக்கியப்பட்டார்,
மன்னிக்கும் சொல்கேட்டேன்;
தம்பிள்ளையாய் ஏற்பார்,
நான் அஞ்சவேமாட்டேன்;
நம்பிக்கையிற் கிட்டிச்சேர்வேன்,
அப்பா, பிதாவென்று சொல்வேன்"

என்றுபாடஏவி, எத்தேசத்தவர்கள், பாஷைக்காரர், கிறத்தவர்களாயினும், நீசப்பாவிகளாகிய சகலருக்கும் உலக முடிவு பரியந்தம் பாவ மன்னிப்பும் மனச்சமாதானமும் தந்து, மகிழ்ந்து பாடச்செய்யும் அதிசய கிரியையை நடப்பிக்கும் புத்தகம் ஓர் வல்லமையாகவே இருக்கிறதென்று நாம் சொல்வது நமது கடமையே.

II. தேவவாக்கு வல்லமை நிறைந்தது; எனெனில் அது மனிதரைப் பாவத்தின் அடிமைத்தனத்தினின்று விடுதலை செய்கிறது.

மனிதர் பாவப் பாரத்தினால் வருந்துகிறார்கள்; அந்தப்பாரத்தை மன்னிப்பு நீக்குகின்றது. மனிதர் பாவத்துக்கு அடிமைகளாயிருக்கிறார்கள்; "விடுதலை"யே அவர்களைக்காத்துக்கொள்ளக்கூடும். "மன்னிப்பு" மாத்திரம் எனக்கருதிய இரட்சிப்பு, உள்ளபடி கவனித்தால் இரட்சிப்பல்ல. குடிவெறியனை அல்லது பொய்யனை நீ மன்னித்து விடக்கூடும். ஆனால் திரும்பவும் குடிகாரன் குடிக்கவும் பொய்யன் பொய்சொல்லவுங் கூடும். குடிகாரன் குடியை வெறுக்கிற தெளிந்த புத்தியுள்ளவனாகவும், பொய்யன் மெய்யனாகவும் மாறவேண்டும். இதுவே அவர்களுக்கு நன்மையா

உவின்சுலோ ஐயர் சென்னைபட்டிணத்தில் இருக்கிறார்.

அக்காலந்தொடங்கி ௲௮௱௩௩ ம் ௵ வரைக்கும் வேறுகுருமார் வருகிறதற்கு உத்தரவு கிடைக்கவில்லை. இங்கேயிருந்தவர்களிலும் ஆறுபேர் மரித்துவிட்டார்கள்.

௲௮௱௩௩ ம் ௵. ஐந்து சமுசாரங்கள் வந்தன. அவர்களில் இரண்டு சமுசாரங்கள் மதுரைக்குப் போய் அங்கே சுவிசேஷ ஊழியத்தை ஆரம்பித்தார்கள்.

யாழ்ப்பாணத்துக்குக் குருமாராகவும், வைத்தியராகவும், அச்சியந்திரசாலைத்தலைவராகவும், ௩௩ புருஷரும், ௩௮ ஸ்திரீகளும், மிஷனரிமாராக வந்தார்கள். முழுத்தொகை ௭௧. இவர்களில் ௰௩ பெயர் யாழ்ப்பாணத்திலும், ௭ பெயர் வடதேசத்திலும், இன்னும் ௩ பெயர் மறுவிடங்களிலுமாக ௨௩ பெயர் மரித்துவிட்டார்கள். ௩௧ பெயர் தங்கள் சென்மதேசத்துக்குப் போய்விட்டார்கள். மற்ற ௰௭ பேரில் ௰௪ பெயர் யாழ்ப்பாணத்திலும், ௩ பெயர் வடதேசத்திலுஞ் சுவிசேஷ ஊழியத்தை நடப்பித்துக்கொண்டிருக்கிறார்கள்.

யாழ்ப்பாணத்துக்கு மிஷனரிமார் வந்த ௰௩ ம் வருஷத்திற்.சனங்கள் கல்விக்குச் சொற்ப கருத்துள்ளவர்களாயிருந்தார்கள். அடுத்த ௰௭ம் வருஷத்தில், ௫ பள்ளிக்கூடங்கள் மாத்திரம் மிஷனரிமார் பொறுப்பிலிருந்தன. அவைகளில் ௨௱ ஆண்பிள்ளைகள் மாத்திரம் படித்தார்கள்.

௲௮௱௰௧ ம் ௵. ௰ பெண்பிள்ளைகளும் படிக்கத்துவங்கினார்கள். ௲௮௱௩௬ ம் ௵. மிஷன் பொறுப்பில் ௱௫௫ பள்ளிக்கூடங்களிருந்தன. அவைகளில் ௫௲ ஆண்பிள்ளைகளும் ௲ பெண்பிள்ளைகளும் படித்தார்கள். இவ்விதமாய் இருபதுவருஷங்களுக்குள் ௫ பள்ளிக்கூடங்கள் ௱௫௫ ஆகவும், ௨௱ பிள்ளைகள் ௬௲ மாகவும் பெருகிவிட்டன. இக்காலத்திலோ சனங்கள் கல்விகற்கப் பேராசையுள்ளவர்களாய் மிஷன் பள்ளிக்கூடங்களை விட்டுத் தங்கள் பொறுப்பில் அநேகபள்ளிக்கூடங்களை வைத்திருக்கிறார்கள்.

௲௮௱௰௮ ம் ௵. சொற்பஊர்ப்பிறந்த உதவிக்காரர்மாத்திரம் இருந்தார்கள். அவர்களுடைய சம்பளம் ௬௫ பவுண்மாத்திரம்; இருபதுவருஷங்களுக்குப்பின், ௩௮ ம் ௵த்தில் அவர்களின் தொகை ஐம்பதும் சம்பளம் ௱௬௫ பவுணுமாய்விட்டது. நாற்பதுவருஷங்களுக்குப்பின், ௫௮ ம் வருஷத்தில் அவர்கள்தொகை நாற்பதும், சம்பளம் ௫௱௨௰

டவுணுமாய்விட்டது. இந்தத் தொகையில் வித்தியாசாலையிலும், ஊர்ப்பள்ளிக்கூடங்களிலும் படிப்பிக்கிற உபாத்திமாரும் அவர்கள் சம்பளமும் எண்ணப்படவில்லை.

௲௮௱௰௮ ம் ௵. தருமப்பள்ளிக்கூடங்கள் (Boarding Schools) மூன்று நாலு மிஷன் ஸ்தானங்களில் ஸ்தாபிக்கப்பட்டன. ௲௮௱௩௨ ம் ௵. மிஷன் இவைகளை நிறுத்தினார்கள். அதற்குமுன் ௲௮௱௨௩ம் ௵. வட்டுக்கோட்டையிலும் உடுவிலிலும் வித்தியாசாலை ஸ்தாபிக்கப்பட்டன.

வட்டுக்கோட்டை வித்தியாசாலை ௲௮௱௨௩ ம் ௵. ஆடி மீ. முதலை, ௫௫ ம் ௵. ஐப்பசி வரைக்கும் முப்பது வருஷங்களாய் நடைபெற்றுவந்தது. இவ்வித்தியாசாலையில், ௭௱ வாலிபர் கல்விகற்றுவிட்டார்கள். இவர்களில் ௩௱ பேர் நாலுவருஷங்களுக்கு மேற்பட வித்தியாசாலையிற் படித்தவர்கள்.

உடுவிற் பெண்பிள்ளைப்பள்ளிக்கூடம் ௲௮௱௨௪ ம் ௵. ஐப்பசி மீ. முதலை தற்காலம்வரைக்கும் நடைபெற்றுவருகின்றது. இதுவரைக்கும் ௪௱௩௩ பெண்பிள்ளைகள் அப்பள்ளிக்கூடத்திற் படித்திருக்கிறார்கள்.

இவர்களைத்தவிர, ஒன்பதுவருஷங்களாய் நடைபெற்றுவந்த வரணிப்பெண்பிள்ளைப்பள்ளிக்கூடத்தில் ௯௰ பேர் படித்தார்கள்.

இங்கிலிஷ் பள்ளிக்கூடங்கள் ௲௮௱௩௫ ம் ௵. ஒவ்வொரு மிஷன் ஸ்தானங்களிலும் ஆரம்பமாகி ௲௮௱௫௫ ம் ௵. வரைக்கும் நடத்தப்பட்டன. அந்தப்பள்ளிக்கூடங்களிற் படித்தவர்களில் அநேகர் வட்டுக்கோட்டைவித்தியாசாலையிற் படித்துத்தேறினார்கள்.

௲௮௱௨௧ ம் ௵. ஒரு அச்சியந்திர சாலைத்தலைவன் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்டார். அவர் இங்கேயிருப்பதற்கு உத்தரவுகிடையாதபடியால் அச்சியந்திரத்தைச் சேர்ச்சுமிஷனுக்குக் (Church Mission) கொடுத்துவிட்டார். திரும்ப ௲௮௱௩௪ ம் ௵. வேறொருவர் அமெரிக்காவிலிருந்துவந்து மானிப்பாயில் அச்சியந்திரசாலையை ஸ்தாபித்தார். துவக்கத்தில் ஒரு இயந்திரம் மாத்திரமிருந்தது. சில வருஷங்கள் போனதின்மேல் நாலு இயந்திரங்கள் நாடோறும் இயங்கின.

௲௮௱௫௫ ம் ௵ அச்சியந்திரசாலை இவ்வூர்க்கிறிஸ்தவர்களாகிய இறிப்பிளி, ஸ்ரோங், டேனே, உவின்சுலோ, (Messrs. Ripley, Strong, Dana, Winslow) என்ப

ஙர்களுக்கு விற்கப்பட்டது. இது மிஷன்பொறுப்பிலிருந்த ௨௧ வருஷத்தில், ௱ கோடியே ௨௰ இலக்கம் பக்கங்கள் அச்சிடப்பட்டன.

உதயதாரகை என்ற புதினபத்திரிகை ௲௮௱௪௰௧ ம் ௵. ஆரம்பமாகி, ௫௯ ம் ௵. வரைக்கும் இங்கிலிஷிலுந் தமிழிலும் மாதங்கடோறும் இருமுறை பிரசுரஞ்செய்யப்பட்டது. ௲௮௱௫௯ ம் ௵. முதலாய்த் தமிழில் மாத்திரம் பிரசுரஞ்செய்யப்படுகின்றது.

இந்த மிஷன் ஆரம்பமானகாலந் துவங்கி இதுவரையில் அந்து செலவிட்ட பவுண் ௧ இலட். ௯௰௲ா. இதிற் சொற்பந்தவிர மிகுதியும் அமெரிக்கன் போட்சங்கத்தினாற் கொடுக்கப்பட்டது. மிஷனெரிமாரின் சம்பளந் தவிர, ௪௪௲௨௱ பவுண் யாழ்ப்பாணத்தாரைக் கல்வியிற் தேற்றும்படி செலவிடப்பட்டது. ௰௧௲௱௮ பவுண் உபதேசிமார், கணக்கப்பிள்ளைகளுடைய சம்பளமாகச் செலவிடப்பட்டது.

இந்த மிஷனுக்குச்சேர்ந்த ஒன்பது திருச்சபைகளிருக்கின்றன. ஒன்பது சபைகளில் மூன்று சுதேசபோதகர்களுடைய பராமரிப்பிலிருக்கின்றன. சபையுண்டானகாலந்துவங்கித் தற்காலம்வரைக்கும் சபையிற்சேர்ந்தவர்கள் ௯௱௭௬ பேர். அவர்களில் ௱௭௮ பெயர் சபையிலிருக்கையில் மரித்துவிட்டார்கள். ௲௮௱௫௬ ம் ௵. முடிவில் சபையிற் சேர்ந்திருந்தவர்கள், ௪௱௫௭ பேர்.

யாழ்ப்பாணத்தார் ௪௪ வருஷங்களாய் அமெரிக்கன் போட்சங்கத்தினாற் கொடுக்கப்பட்ட நன்மைகளை அனுபோகம்பண்ணியிருக்கிறார்களென்று மேற்சொல்லப்பட்ட சரித்திரப்பொழிப்பினால் விளங்கும். தேவனுடைய திவ்வியவாக்கைப்பற்றிய அறிவே எல்லா நன்மைகளிலும் விசேஷமானது. இவ்வறிவை ஊட்டுதற்கும் மோட்சவழியைக் காட்டுதற்குமே, இச்சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. இந்நோக்கங்கருதியே எல்லாக்காரியங்களுஞ் செய்யப்பட்டன.

யாழ்ப்பாணத்தார் அனுபவிக்கும் லௌகிக நன்மைகளில் எவ்வளவு வேதாகம ஒளியினால் வந்ததென்று ஆர் சொல்லக்கூடும்? இவ்வளவு ஏராளமான நன்மைகளை அனுபவித்த உங்கள்மேல் எவ்வளவு கடன்பொறுத்திருக்கின்றதென்று உணருகிறீர்களா? இவ்வளவு நன்மைகளைத் தேவன் உங்

களுக்கு ஏய்ந்தது நீங்கள் மாத்திரம் சுகித்து உங்களுக்காகப் பொக்கிஷங்களைச் சேர்த்துவைப்பதற்கல்ல, இந்நன்மைகளை உங்கள் திரவியங்கள் வழியால் மறுபேருக்கு ஊட்டவும் உங்கள் பொக்கிஷங்களைப் பரமண்டலத்திற் சேர்க்கவுமே செய்தார். உங்கள் பொக்கிஷங்களைப் பரமண்டலத்திற் சேர்க்கும்படி அவர் குறித்த நோக்கத்துக்காகச் செலவிடுகிறீர்களா? இதற்குமுன் உங்கள் சுகானுபோகங்களுக்காகச் செலவழித்தீர்களே. ஆனால், இனிமேல் தேவனுக்கென்று ஒருபங்கை வருஷந்தோறும்செலவிடும்படி நிண்ணயம்பண்ணமாட்டீர்களா ?

தேவனுடன் ஒப்புரவாகிக் கடைசியில் நித்திய சீவனைப்பெறும்படி எத்தனைபேர் படிப்பிக்கப்பட்டார்கள். முதன்முதல் எல்லாரும் ஆத்தும இரட்சணியவழியைத் தேடி மோட்சத்தில் தங்களுக்காகப் பொக்கிஷத்தைச் சேர்த்துவைத்தால் எங்களுக்கு எவ்வளவு சந்தோஷம். இந்த மிஷனாற் படிப்பிக்கப்பட்டவர்களில் ஆராகுதல் கெட்டுப்போனால், அது அவர்கள் இரட்சணிய வழியை அறியாததினாலல்ல, விலைமதித்தற்கரிய மோட்ச பொக்கிஷத்தை விட்டு இவ்வுலகத்துக்கடுத்தவைகளைத் தேடுவதினாற்றான் அப்படியாகும். அவர்கள் நித்திய சீவனை அடையப் பிரியமுள்ளவர்களாகிற் கெட்டுப்போக இடமில்லை. ஒரு பாவியாகுதல் கெட்டுப்போவது தேவனுக்கு விருப்பமல்ல. “பிரியமுள்ள எவனும் வந்து சீவநீரைக் கிரயமின்றி அருந்தக்கடவனென்று” அவர் அழைக்கிறார்.

5. இப்படி நம்மை மீட்கவே
மனுஷிகமானீர்.
தேவ இஸ்தலஞ் சேர்க்கவே
வானத்துக்கேறினீர்.

---

## 7, S.

1. எங்கள் நெஞ்சி லாவியை
ஊற்றுந் தயாபரரே.
பாவம்போக்கும் பலியைத்
தேவரீர் கொடுத்தீரே.

2. இதனால் நாம் பத்தியாய்ப்
பெற்றுக்கொள்ளத் தயவாய்,
தே நம தாத்துமாவிலே
சங்கியாளும் யேசுவே.

3. அன்ப ண்டிரட்சை செய்பவர்,
ப்போலக் காப்பவர்,
உபா சபாதை காட்டியே
நம மக் கருள் ஈந்தாரே.

4. எலியாவின் நாளையிற்
பஞ்சம் போகும்படிக்கே,
நல்ல செழிப்பாகவே,
தேவரீர் இரங்கினீர்.

5. எங்கள் வேண்டலைக் கேட்டு,
கிர்பைசெய்யுங் கர்த்தரே.
உமக்குக் கீழமைந்து
நாம் நடக்கச் செய்வீரே.

---

களுக்கு ஈய்ந்தது நீங்கள் மாத்திரம் சுகித்து உங்களுக்காகப் பொக்கிஷங்களைச் சேர்த்துவைப்பதற்கல்ல, இந்நன்மைகளை உங்கள் திரவியங்கள் வழியால் மறுபேருக்கு ஊட்டவும் உங்கள் பொக்கிஷங்களைப் பரமண்டலத்திற் சேர்க்கவுமே செய்தார். உங்கள் பொக்கிஷங்களைப் பரமண்டலத்திற் சேர்க்கும்படி அவர் குறித்த நோக்கத்துக்காகச் செலவிடுகிறீர்களா? இதற்குமுன் உங்கள் சுகானுபோகங்களுக்காகச் செலவழித்தீர்களே. ஆனால், இனிமேல் தேவனுக்கென்று ஒருபங்கை வருஷந்தோறும்செலவிடும்படி நிர்ணயம்பண்ணமாட்டீர்களா?

தேவனுடன் ஒப்புரவாகிக் கடைசியில் நித்திய சீவனைப்பெறும்படி எத்தனைபேர் படிப்பிக்கப்பட்டார்கள். முதன்முதல் எல்லாரும் ஆத்தும இரட்சணியவழியைத் தேடி மோட்சத்தில் தங்களுக்காகப் பொக்கிஷத்தைச் சேர்த்துவைத்தால் எங்களுக்கு எவ்வளவு சந்தோஷம். இந்த மிஷனுற் படிப்பிக்கப்பட்டவர்களில் ஆராகுதல் கெட்டுப்போனுல், அது அவர்கள் இரட்சணிய வழியை
அறியாததினுலல்ல, விலைமதித்தற்கரிய [illegible] பொக்கி
ஷத்தை விட்டு இவ்வுலகத்துக்கடுத்தவை [illegible]
ஞற்ருன் அப்படியாகும். அவர்கள் [illegible]க்காய்
டையப் பிரியமுள்ளவர்களாகிற் செ[illegible]
லை. ஒரு பாவியாகுதல் கெட்டுப்பே[illegible]
ருப்பமல்ல. "பிரியமுள்ள எவனு[illegible]ப் பத்தியாய்ச்
யமின்றி அருந்தக்கடவனென்று" அ[illegible]

---

5. இப்படி நம்மை மீட்கவே
மனுஷீகமானீர்.
தேவ இஸ்தலஞ் சேர்க்கவே
வானத்துக்கேறினீர்.

---

## 7, S.

1. எங்கள் நெஞ்சி லாவியை
ஊற்றுந் தயாபரரே.
பாவம்போக்கும் பலியைத்
தேவரீர் கொடுத்தீரே.

2. இதனால் நாம் பத்தியாய்ப்
பெற்றுக்கொள்ளத் தயவாய்,
நம தாத்துமாவிலே
தங்கியாளும் யேசுவே.

3. ஆண்டிரட்சை செய்பவர்,
பிதாப்போலக் காப்பவர்,
மோட்சபாதை காட்டியே
நமக் கருள் ஈந்தாரே.

4. எலியாவின் நாளையிற்
பஞ்சம் போகும்படிக்கே,
நல்ல செழிப்பாகவே,
தேவரீர் இரங்கினீர்.

5. எங்கள் வேண்டலைக் கேட்டு,
கிர்பைசெய்யுங் கர்த்தரே.
உமக்குக் கீழமைந்து
நாம் நடக்கச் செய்வீரே.

---

4

## பல்லவி.

அன்புள்ள யேசுவே வாரும்—உம
தடியார்கள் கூடியிக் கூட்டத்தில் வாரும்.

## அனுபல்லவி.

ஏழைகள் செபிக்கும் விண்ணப்பங்களேளும்—கேட்டு
அன்பாக நமக்கருள்செய்ய வேணும்- அன்புள்ள.

## சரணங்கள்.

1. ஆவியின் முத்திரை தந்து—நம்மைப்
பரலோக வாழ்வுக்குட் சேர்க்கவேவாரும்.
திக்கற்ற பாவிகள் மனஞ்சோர்ந்து போகாமல்—மிகு
அக்களிப்புட னும்மைச் சேவிக்கச்செய்யும்—அன்பு.

2. சத்தியவாக்கை நினைந்து—உமது
சீரான பாதையில் நடக்கவேசெய்யும்.
நித்திய பிதாவின் நேசகுமாரனே. -பரி
சுத்தாவி தந்தெம்மை யாளவே வாரும்— அன்புள்ள.

3. அன்னை மரி வயிற்போர்ந்து—விரும்பி
அன்புடன் நம்மை மீட்கவே வந்தீர்.
சின்னஞ்சிறியோரின் தீமைகள் போக்கிட— உயர்
மன்னன் தவிது குல மைந்தனு யுதித்தீர்— அன்புள்ள.

4. ஆத்துமநேசரே வாரும்—நம
தாபத்தில் எம்மைத் தாங்கிடவாரும்.
பாவத்தினாலே பந்திக்கப்பட்டோரைச்
சாபத்தி னின்று நீக்கிடவாரும்— அன்புள்ள.

5. அன்னையும் நீர் தந்தையும்நீர்—பின்னும்
ஆருமற்றோருக்கு ஆதாரம் நீரே.
உம்மை நினைந்து ஓலமிட்டோருக்கு
நல்வரங்கொடுக்க நாடியே வருவீர்— அன்புள்ள.